# DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

## **OS.No.7/2016**

Deposition of Witness : PW 1

| | |
|---|---|
| Name - திரு. மாதவன் | Father's Name - சங்கரலிங்கம் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2023.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**10, 15 முதல் 19, 22 முதல் 26, 28, 29, 31 முதல் 34 வரையிலான பிரதிவாதி த.கு.வி.:**

கேள்வி : வாதசாஆ 9 என்பது கே.தொட்டப்பகவுண்டர் 1957ம் வருடம் இறப்பு பதியப்படவில்லை என்று உள்ள ஆவணம் தான் என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : வாதசாஆ 9 போல தொட்டப்ப கவுண்டர் 1935 அல்லது 1940ல் இறந்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : அதுபோல பாக்கியம் என்பவர் 1955ம் ஆண்டு காலமானார் என்பதற்கான இறப்பு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : அதுபோல் செல்லம்மாள் எந்த வருடம் காலமானார் என்று குறிப்பிட்டு உங்களால் சொல்ல முடியுமா என்றால்?

பதில் : 1980 முதல் 1983 வரையான காலகட்டத்தில் இறந்திருப்பதாக நான் தெரிந்து கொண்டேன்.

கேள்வி : வாதசாஆ 1 – 24.04.1980ல் – ஏற்பட்ட காலத்தில் செல்லம்மாளும், பாக்கியமும் உயிருடன் இருந்தார்கள் என்றால்?

பதில் : இல்லை

கேள்வி : வாதசாஆ 8ல் சங்கரலிங்க கவுண்டர் மகள் ராசம்மாள் என்பவர் திருமலாபுரம் நாடார் தொடக்கப்பள்ளியில் பயின்றதற்கான சான்றிதழ்

என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : வாதசாஆ 8 எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால்?

பதில் : 17.03.2020 ம் தேதி வாங்கப்பட்டது

கேள்வி : வாதசாஆ 8 என்பது தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்ட சான்றிதழ் இல்லை என்றால்?

பதில் : தலைமை ஆசிரியர் தான் வழங்கினார்

கேள்வி : வாதசாஆ 8 ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர் உங்களது தாயாரும் இல்லை என்றால்?

பதில் : என்னுடைய தாயார் தான்.

கேள்வி : உங்கள் தாயார் எத்தனை வகுப்பு படித்துள்ளார் என்றால்?

பதில் : 6 ம் வகுப்பில் இடையில் நின்றுவிட்டார்.

கேள்வி : இதுபோல் உங்கள் தாயாருடன் பிறந்த செல்லம்மாள், சரசுவதி இதே பள்ளியில் பயின்றார்களா?

பதில் : ஞாபகமில்லை

கேள்வி : தாவா சொத்துக்களும் அதை சார்ந்த பிற சொத்துக்களும் உங்கள் தாத்தா தொட்டப்ப கவுண்டருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : உங்களுடைய வழக்குரையில் ஜமீன் ஒழிப்பு சட்டத்தின்படி தாவா சொத்தும் பிற சொத்துக்களும் உங்களுடைய தாத்தா தொட்டப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்

கேள்வி : இந்த ஜமீன் ஒழிப்பு சட்டத்தின்படி உங்களுக்கு தாத்தா தொட்டக்கவுண்டருக்கு கிடைத்த சொத்துக்கள் எவை எவை?

பதில் : சர்வே எண்.394/1, 393/7, மற்றும் இரண்டு சொத்துக்கள் இருக்கிறது. அது ஞாபகம் இல்லை.

இருதரப்பு வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.08.2023 அன்று சனிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2023.08.05 18:29:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
05.08.2023.